# புலனச் செயலியில் இலக்கியத் தடங்கள்

**முனைவர் பா.அருள்மனோகரி**
உதவிப் பேராசிரியை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
உறுப்புக் கல்லூரி, சங்கரன்கோவில்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

இயற்கையின் அசைவுகளிலிருந்து வெளிப்பட்ட ஓசையின் வளர்ச்சியாகத் தகவல் பரிமாற்றக் கருவிகளைக் கூறலாம். ஒருவரிடமிருந்து செல்லக்கூடிய செய்தியை மற்றவருக்குத் தெரிவிக்க உயர்திணை வகைகளும் அஃறிணைப் பொருட்களும் பயன்படுத்தப்பட்டதைப் பல ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. முரசு அறைதல், இலை மற்றும் புறாக்கள் வழித் தூது விடுதல் தொடங்கி செய்திப் பரிமாற்றங்கள் நிகழ்த்திய ஊடகக் கருவிகள், பல மைல் கற்களைத் தாண்டி வளர்ந்து வந்து இன்று உலகையே கட்டுக்குள் கொண்டுவந்து விட்டன. பொதுவான நிகழ்வுகளைப் பகிர்ந்துகொள்ளப் பொதுமக்களுக்கென உருவானதால் மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் என அவை அழைக்கப்பட்டன. சமூகத்தையே மாற்றி அமைக்கும் ஆற்றல் ஊடகங்களுக்கு என்றும் உண்டு. இன்று அதிக அளவில் சமூகம் பயன்படுத்தும் ஊடகம் இணையதளம் ஆகும். இணையதளம் என்ற ஊடகத்தைப் பயன்படுத்துவதில் தமிழ்மொழி மூன்றாவது இடத்தில் உள்ளது. அவை பயன்படுத்தும் தன்மைக்கேற்ப நன்மையையோ தீமையையோ வழங்குகின்றன. தற்காலச்சூழலில் உடனுக்குடன் செய்திகளை எளிதில் பரிமாற மிகுதியாகப் பயன்படும் இணையச்செயலி புலனச்செயலி(Whatsapp) ஆகும். அவற்றில் பரிமாறப்படும் செய்திகளில் தமிழ் இலக்கியத்தின் தாக்கங்களையும் மிகுதியாகக் காணமுடிகிறது.

**புலனச்செயலி**

அலைபேசியின் வழி பயன்படுத்தப்படும் பரிமாற்றச்செயலி பற்றி இணையதளங்களில் தெளிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இருக்கின்ற இடத்தில் தேவைப்படுகின்ற தகவல்களைக் கைபேசி வழியாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. குறுந்தகவல்களை அனுப்பும் வசதியும் இதில் இருந்தது. குறுந்தகவல்களின் மாற்றாகத் தொடங்கப்பட்டவையே முகநூல், புலனச்செயலி ஆகும். “Yahoo நிறுவனத்தில் பணியாற்றிய ஜேன்கோமஇ பிரியன் ஆக்டன் என்ற பொறியியல் வல்லுநர்கள் முகநூல் (facebook) நிறுவனத்தில் பணியாற்ற விரும்பினர். ஆனால் அவர்களுக்குப் பணி மறுக்கப்பட்டது. எனவே புதிதாகத் தகவல் பரிமாற்றியை உருவாக்க விரும்பினர். 2009 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 24 ஆம் நாள் Whatsapp உருவானது. ஙாயவளரி என்ற சொற்றொடரின் சுருக்கமே இதுவாகும். கலிபோர்னியாவின் Merlopark இல் இதன் தலைமையகம் உள்ளது. இதன் சிறப்பறிந்து facebook, இங்க் நிறுவனங்கள் விரும்பி வந்து இதனுடன் 2014ஆம் ஆண்டு இணைந்துவிட்டன.”[1]

உலகின் அதிவேகமான வளர்ந்து வருகின்ற நிறுவனமான வாட்ஸ்அப் என்பதற்கு விக்கிபீடியா கீழ்க்கண்டவாறு விளக்கம் தருகிறது. “நுண்ணறி அலைபேசிகளில் இயங்கும் உடைமை உரிமையுள்ள (Proprietary) ஒரு செய்திப் பரிமாற்றச் செயலி ஆகும். தமிழில் பகிரி அல்லது புலனம் அல்லது கட்செவிஅஞ்சல் என்றும் அறியப்படுகிறது. ஆண்ட்ராய்டு, ஆப்பிள், விண்டோஸ் மொபைல், பிளாக்பெரி போன்ற அலைபேசி இயங்குதளங்களில் இயங்கும் இச்செயலி நிகழ இணையவசதி தேவை”. 2 மக்கள் சமூகமாக இங்கு ஒன்று சேர்கின்றனர். மனித உறவுகள் செழிக்கின்றன. அதற்கு உதவியாக இயங்கும் கருவிகளில் இலக்கியம் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. தவறான செய்திகள் சில பகிரப்படும்போது அதனை வாசகர்கள் உணர்ந்தும் விடுகின்றனர். இக்கருத்தை மெய்ப்பிக்க மெப்லூவன் என்ற அறிஞரின் கருத்தினைக் கூறலாம். “ஊடகம் என்பது ஒரு புதிய தொழில்நுட்பம். அந்தப் புதிய தொழில்நுட்பமும் நமது உடல் உள்ளம் மற்றும் உயிரின் நீட்சியே ஆகும். கணினியின் அமைப்பு நம் நரம்பு மண்டலத்தின் நீட்சி”.[3] புலனச்செயலியும் நரம்பு மண்டலத்தோடு தொடர்புகொண்டு செய்தியை உணர வைப்பதால் எளிதில் தாக்கத்தினையோ புரிதலையோ தருகிறது.

**“காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்”[4]**

என்ற பாரத தேசத்தின் வளர்ச்சிக்கான பாரதியின் கவிதைவரிகளும் இதனையே விரும்பின. புலனச்செயலி பயன்பாட்டுக்கு வரும் முன்பே மூன்று முக்கிய விதிமுறைகளைக் கடைபிடிப்பதில் உறுதியாக நின்றது. 1. வாடிக்கையாளர்களுக்குத் திருப்தியான அனுபவம் கொடுப்பது. 2. விளம்பரம் கிடையாது. 3. வாடிக்கையாளரின் தனி உரிமைகளுக்கு மதிப்புக்கொடுத்தல்.

ஊடகக் கோப்புகள் இங்கு அனுப்பவும் பெறவும் பயன்படுகின்றன. வார்த்தைகள் படங்கள் காணொலிகள் இருப்பிடம் மற்றும் அழைப்புகள் முழுமறையாக்கத்துடன் பரிமாறப்படுகின்றன. இங்குதான் இலக்கியங்கள் நிலைபெறுகின்றன. எனவே தான் 180 நாடுகளில் 100 கோடி மக்களுக்கு மேல் புலனச்செயலியைப் பயன்படுத்துகின்றனர். ஒரே நேரத்தில் அதிகப்படியாக 256 நபர்களிடம் தகவல்களைப் பரிமாறலாம். தங்கள் குழுவிற்குத் தாங்களே பெயர்வைக்க முடியும்.[5].

எட்டுத் திசைகளிலும் வெற்றி எட்டவேண்டும் என்பதற்கு முரசு முழங்கிய கால வளர்ச்சியின் வெற்றி மற்றும் அறிவு முதிர்ச்சியாக இதனைக் கருதலாம். மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நகரங்களில் வாழும் தமிழர்கள் உலக நாடுகளில் தமிழ் மொழி ஆராய்ச்சியின் நடப்புநிலை மற்றும் புதிய இலக்கிய உருவாக்கங்கள் அனைத்தும் உடனுக்குடன் இங்குப் பகிரப்படுகின்றன.

**“தேமதுரத்தமிழோசை உலகெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்”.[6]**

என்ற பாரதியின் ஆசை புலனச்செயலி வழி நிறைவேறியுள்ளது. இதன் சிறப்புணர்ந்தே மலேசிய தனித்தமிழியக்க மாநாட்டில் வெளியான நுட்பவியல் கலைச்சொற்கள் வரிசையில் Whatsapp என்ற சொல்லுக்குப் ‘புலனம்’[7] என்ற விளக்கம் தரப்பட்டு முதலிடம் வழங்கப்பட்டுள்ளது.

அதிவேகமாக இயங்குவதோடு உலகம் முழுவதுமுள்ள இணையதள வசதியுள்ள கைபேசிகளை இணைக்கும் சிறப்பே புலனச்செயலியை ஊடகத் துறையில் முன் நிறுத்தியிருக்கிறது. இதனை உறுதிப்படுத்தச் சில சான்றுகள்.

### புலனச் செயலியில் இலக்கியப் பகிர்வுகள்

தமிழ் இலக்கியங்களின் வடிவங்களுள் ஒன்றான தூது என்ற இலக்கியத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியாகப் புலனச்செயலியைக் கருதலாம். காலையில் எழுந்து வணக்கம் தெரிவிப்பது தொடங்கி இரவு ஓய்விற்குச் செல்லும்போது வணக்கம் கூறுவது வரை இலக்கியங்கள் தொடர்ந்து வாழ்கின்றன. செய்தியை வெளிப்படுத்தும் குறியீடாக இங்கு இலக்கியம் செயல்படுகிறது.

தமிழ்விடுதூது நூலில் "தூது செல்லுமாறு தமிழ் மொழியை வேண்டிக்கொள்ளும் காதலி(பக்தர்) தமிழுக்கு உள்ள சிறப்பியல்புகளை எல்லாம் எடுத்துக்கூறி நீயே என் கருத்தை முற்றுவிக்கும் தகுதி பெற்றிருக்கிறாய். நீதான் என்குறையைத் தக்கவாறு தலைவனிடம் எடுத்துரைக்க முடியும் என்று சொல்லுமிடத்தில் தமிழ் மொழியின் இலக்கிய வளம் முதலான எல்லாச் சிறப்பும் எடுத்துரைக்கப்படுகின்றன''.[8] என்ற மு.வ.வின் கருத்து இங்கு நோக்குதற்குரியது. கருத்தைத் தெளிவுபடுத்தும் வளம் தமிழ் இலக்கியத்திற்கு உண்டு என்பதும் தகவல் பரிமாற்றத்தில் உறுதியாகிறது. இதனை எடுத்துக்காட்டோடு விளக்க மே மாதத்தில் வெளிவந்த செய்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இலக்கியத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டு ஆய்வுகள் செய்து வரும் பேராளர்கள் குழுவாக இணைந்து புலனச்செயலியில் இலக்கியச் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர். நூல்களில் எழுதி வெளியிட வழியில்லாத இளம் கவிஞர்கள் தங்களுக்குள் வெளிப்படும் கவித்திறனை இங்கு வெளிப்படுத்துகின்றனர். ஹைகூ கவிதையின் பாதுகாப்புப் பெட்டகமாக இது விளங்குகிறது.

**"முள்ளின் திறமை**
**காலால் மிதித்தவனைக்**
**கையால் எடுக்க வைக்கிறது''**

புலவனின் முகம் இங்குப் புலப்படவில்லை ஆனால் சமூகத்தைச் சிந்திக்க வைப்பதில் சிறந்து நிற்கிறது.

இலக்கியம் தொடர்பான கருத்தரங்குகள் போட்டி உடனுக்குடன் இங்குத் தகவல்களாகப் பரிமாற்றப்படுகின்றன. கேள்விப்படாத பல இலக்கிய இதழ்களை இதன் வழி அறியமுடிகிறது. ஓவியம்இ சிற்பம் போன்ற கலை இலக்கியத் திறனை வெளிக்கொணரும் கருவியாகவும் புலனச்செயலி விளங்குகிறது. சிறுகதைகள் இ கதை விமர்சனங்கள் அன்றாடம் வெளிவருகின்றன. கவிஞர் நா. முத்துக்குமார் எழுதிய கவிதையினைப் புத்தகங்களுக்குள் புரட்டித் தேட வேண்டிய அவசியமின்றிப் போனது. நேரம் விரயமாவதில்லை. வகுப்பறைப் பழைய நினைவுகளைப் பதிவு செய்த சில வரிகள் பத்திரமாகச் செயலிக்குள் சேர்ந்து கிடக்கிறது.

**"மழை பெய்யா நாட்களிலும்**
**மஞ்சள் குடையோடு வரும்**
**ரோஜாப்பூ மிஸ் வகுப்பின்**
**முதல் நாளன்று எங்களிடம்**
**கேட்டார் படிச்சு**
**முடிச்சதும் என்ன ஆகப்**
**போறீங்க?**
**................................**
**'எங்க அப்பாவுடைய**
**இரும்புக் கடையைப்**
**பாத்துப்பேன்'**
**கடைசி பெஞ்ச் சி.என்.ராஜேஃ**
**சொன்னபோது**
**எல்லோரும் சிரித்தார்கள்**
**இன்றவன் நியூஜெர்சியில்**
**மருத்துவர்........**

என்று கவிதை நிற்கிறது.

'நெருஞ்சி' என்ற காலாண்டிதழைப் பற்றிப் புலனச்செயலி வாயிலாக அறிய முடிந்தது. வைரமுத்துவின் எளிய நடைக் கவிதையை உள்வாங்க எண்ணிய ஆவலின் ஏக்கம் வீண்போகாமல் விரைவில் பலித்தது.

**"எதிர்மறை வார்த்தைகள்
உதிர்ந்து போகட்டும்.
உடன்பாட்டு மொழிகள்
உயிர் கொண்டெழட்டும்
புளித்த வார்த்தைகள்
மாறும் போது
சலித்த வாழ்க்கையும்
சட்டென்று மாறும்"**

முன்பெல்லாம் புத்தகம் வெளிவந்து சில காலங்கள் கழித்துத்தான் கவிதைகளையோ கதைகளையோ வாசிக்க முடியும். கையில் கிடைப்பதற்குச் சில தகுதிகள் அவசியம். ஆனால் புலனச்செயலியில் எழுதப்பட்ட சில நாட்களிலேயே இலக்கியங்கள் பதிவாக்கம் பெறுகின்றன. ஜி.எஸ்.டி.வரி விதிக்கப்பட்ட சில நாட்களிலேயே உருவான பழனிபாரதியின் கவிதையை உடனே வாசித்து உள்வாங்க முடிந்தது.

**"......................
மாட்டுக்கறி உண்பவரை
கொன்று கொன்று
மனிதக்கறி உண்பதுதான்
புதிய இந்தியா
மருத்துவ மனைகளில்
மழலைகளின் மூச்சறுத்து
வீடுகளில்
'கிருஷ்ண பாதம்' வரைவது தான்
புதிய இந்தியா...
செத்து செத்துப் பிறக்கிறது
புதிய இந்தியா
பிறந்து பிறந்து சாகிறது
புதிய இந்தியா".**

சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய கவிதைகள் உடனே பொது மக்களை வந்தடைவது சிறந்த சூழலை உருவாக்க வழிவகுக்கிறது. அமரந்தாவின் 'வலி' என்ற சிறுகதைத் தொகுப்பினைப் பற்றி முழுவதும் www.noolveli.com பகுதியில் வெளிவந்துள்ள செய்தியோடு அதன் விமர்சனத்தையும் 'கானல்வரி' குழுப் பதிவில் உடனே அறியும் வாய்ப்பு கிடைத்தது.

மகாபாரதக் கௌரவர்கள் நூறுபேரின் பெயர்களை முதன்முதலில் பதிவுசெய்து வழங்கிய செயலி புலனச்செயலி ஆகும். துரியோதனன் துச்சாதனன் துசாகன் .........விரஜசன் என எளிதில் கேள்விப்பட்டிராத செய்திகளைப் பெற்றுப் பதிவு செய்து வைக்கமுடிகிறது. புராணங்களில் வரும் சிறிய கிளைக் கதைகளைச் செயலியில் இணைந்துள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்கள் குழுவின் பகிர்வில் அன்றாடம் காண முடிவதுஇ இருந்த இடத்திற்கு வந்து நிறைந்த செய்திகள் சேர்வதை உறுதிபடுத்துகிறது. 'பாடம் புகட்டும் பழமொழிகள் என்ற தலைப்பில் 53 பக்க ஆவணங்கள் பழமொழியின் உண்மையான பொருளை விளக்குவதாக வந்து சேர்ந்தன. அதனைக் கொண்டு மிகப்பெரிய ஆய்வே நிகழ்த்தலாம். உண்மையான உரிய கருத்துக்கதைளோடு அவை பதியப்பட்டுள்ளன.

Dr.Robert caldwell
Biography in Tamil
www.youtube.com
http://youtube/c.JDT7qGS.jrk

இது போன்ற முகவரிகளுடன் தமிழறிஞர்களின் முழு விபரங்களைப் பெற்றுக் கொள்ள புலனச்செயலி உதவுகிறது.

**'ஊருக்கு வெளியில் பெரிய**
**பங்களா**
**வீட்டில் இருப்பது ரெண்டு பேர்.'**

இன்றைய சமூகத்தைப் பிரதிபலிக்கும் ஹைகூ கவிதைகளும் நாள்தோறும் இப்பகுதியில் தவறாமல் வெளிவருகின்றன. இவற்றின் சிறப்புஇ எழுதியவர் பெரும்பாலும் வெளிப்படுத்தப்படுவதில்லை.

இலக்கியவாதிகள் பிறந்தநாளை மறந்துவிடக்கூடிய இயந்திரமயமான இன்றைய காலகட்டத்தில் புலனச்செயலி வழி, தவறாமல் அவர்களைப் பற்றிய முழுவிபரங்களை எளிதாகப் புரிந்துகொள்ளும் அளவில் செய்திகள் கிடைக்கினறன. நூலகத்திற்குச் சென்று நாம் விரும்பும் நூல்களைத் தேடும் காலவிரயம் இங்குத் தவிர்க்கப்படுகிறது. புதினங்கள் இ சிறுகதைத் தொகுப்புகள்இ மரபுக்கவிதைஇ புதுக்கவிதைத் தொகுப்புகள் போன்ற எந்த வகை இலக்கியமானாலும் புத்தகச்சோலை என்ற பகுதியில் நுழைந்து தேடிப்பயனடைய முடிகிறது. மிகப்பெரிய தொகுப்புக்களாக அமையும் தகவல்கள் நேரடியாக இணையதளத்திற்குள் அழைத்துச் செல்வதால் முழுமையாகக் கிடைக்கின்றன. மூலநூலைப் பார்த்ததற்கிணையாக இந்நிலை அமைகிறது.

**எ.கா.** லீ குவான் யூ
சிங்கப்பூரின்
சிற்பி
எஸ்.எஸ்.வி.மூர்த்தி 284 Pages - PDF

முற்கால இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள்இ சமயஇலக்கியங்கள் இணையதள இலக்கியங்கள்இ உலகமொழி இலக்கியங்கள் என அனைத்து வகை இலக்கியங்களும் இங்குப் பாகுபாடின்றி பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. நல்ல செய்திகள் பரிமாறப்படுவது மிக அவசியம். அதற்கு நண்பர்கள் குழுவோ உறவினர்கள் குழுவோ சரியானதாக அமைவது முக்கியம். பல்சுவைச் சுரங்கமஇ கானல்வரிஇ அழகுதமிழ் எனப் பல இலக்கியம் தொடர்பான குழுக்கள் இலக்கியத்தின் வளர்ச்சிக்காகவே செயல்படுகின்றன. தேவையற்ற தொடர்புகளை விட்டு நீங்கி இவை போன்ற குழுக்களாகப் புலனச்செயலியில் தமிழ்ப்பற்றுமிக்கவர்கள் இணைந்தால் தமிழ் இலக்கியம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வாழும். வளரும். பாதிப்பில்லாத சமூகத்தை இதனால் உருவாக்கலாம். இலக்கியத்தடங்கள் புலனச்செயலியின் வளர்ச்சியில் சிறந்த அடையாளம் எனலாம்.

**குறிப்புகள்**

1. https://m.youtub.com
2. https://ta.m.wikipedia.org
3. சமூகமதிப்புக்கல்வி, பதிப்புத்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 2016.ப 68.
4. பாரதியார் கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், 2007. ப 24.
5. https://www.whatsapp.com
6. பாரதியார்கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், 2007. ப. 22.
7. https://www.quora.com
8. வரதராசன். மு, தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, பதினேழாம் பதிப்பு 2002, ப. 147.

இவைகளுடன் புலனச்செயலியில் வெளிவந்த தகவல்கள்.